**மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம், புதுக்கோட்டை**
**(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், புதுக்கோட்டை)**

**முன்னிலை – திரு.K.S.பால்பாண்டியன், B.A.,B.L.,**
**தீர்ப்பாய நீதிபதி (தலைமை நீதித்துறை நடுவர்) புதுக்கோட்டை,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை**

**எம்.சி.ஓ.பி எண்.506/2023**

**ராஜீ,**
த/பெ.முத்தையா,
எண்.3/1, காந்தி நகர் 7ம் வீதி,
புதுக்கோட்டை மாவட்டம். ....மனுதாரர்

/எதிர்/

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக்கழகம்,
திருச்சி. ....எதிர்மனுதாரர்

இம்மனு **28.08.2023** அன்று மாண்பமை புதுக்கோட்டை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, அதன் பின்னர் மாண்பமை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு 12.12.2025 தேதியில் மாற்றம் செய்யப்பட்டு மேற்படி மனுவானது **MCOP NO.506/2023** என்று இந்நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனு 26.02.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.கருப்பையன் அவர்கள்

முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.M.கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

தாவா விபத்தில் காயமடைந்த ராஜு என்பவர் பல்வேறு தலைப்புகளின் கீழ் ரூ.10,00,000/- இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டம் 1988 பிரிவுகள் 140, 141, 142, 163A, 163B, 166 மற்றும் மோட்டார் வாகன விதிகள் 3(1)ன் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2) **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட சுருக்கமான விபரம் பின்வருமாறு:**

மனுதாரர் சென்னை ஆவடி இந்திய அரசு பாதுகாப்பு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டார். விபத்து சமயத்தில் மனுதாரருக்கு வயது 75. 11.07.2023 தேதியில் காலை சுமாபர் 08.00 மணியளவில் மனுதாரர் TN 55 BE 9361 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தில் மனுதாரரின் மூத்த மகன் கண்ணன் என்பவரின் மகனான சரண்ராஜ் என்பவரை பள்ளிக்கூடம் போவதற்கு அரிமளத்திற்கு பஸ் ஏற்றி விடுவதற்காக புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் கொண்டு சென்று பஸ் ஏற்றிவிட்டு திரும்ப அவரது வீட்டிற்கு செல்வதற்காக புதுக்கோட்டை பெரிய பேருந்து நிலையத்தில் வெளியில் அம்மா மருந்தகம் அருகே சத்தியமூர்த்தி சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக இடதுபுறம் நின்று கொண்டிருந்தபோது மேற்படி அதே ரோட்டில் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 45 N 4018 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிகவேகமாகவும்,

ஹாரன் அடிக்காமலும், சாலை விதிகளை கடைபிடிக்காமலும் கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு வலது பக்க தலையில் காயம்பட்டு மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டுவிட்டது. வலது பக்க கணுக்காலில் எழும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இடது பக்க தோள்பட்டையிலும், முதுகு பகுதியிலும் காயங்கள் ஏற்பட்டுவிட்டது. அதனால், எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரான ஒரு ஞானராஜ் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. தாவா விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக அவர் 11.07.2023 தேதி முதல் 19.07.2023 தேதி வரை புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றும், அதன்பிறகு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் வந்துள்ளார். மனுதாரருக்கு வலது பக்க தலையில் ஏற்பட்ட காயத்தினால் மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதால் அவருக்கு அடிக்கடி மயக்கம் ஏற்படுகிறது. வலது பக்க கணுக்காலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளதால் அவரால் தமது அன்றாட கடமைகளை சரிவர செய்ய முடியவில்லை. அதற்காக மனுதாரர் ரூ.10,00,000/-த்தை இழப்பீடாக கோரியுள்ளார். அதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் கண்ட சுருக்கமான விபரம் பின்வருமாறு:</u>**

மனுவானது சட்டப்படிக்கும், சங்கதிகளின்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி விபத்து நடைபெறவில்லை. 11.07.2023 தேதியில் எதிர்மனுதாரரின் TN 45 N 4018 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தை அதன் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து முறையாக ஓட்டிச்சென்றுள்ளார். மேற்படி பேருந்தானது திருச்சி-இராமேஸ்வரம்

செல்லக்கூடிய பேருந்தாகும். காலை 08.05 மணியளவில் மேற்படி பேருந்தை எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் புதுக்கோட்டை பேருந்து நிலையத்திற்குள் செல்வதற்காக அனைத்து சமிக்ஞைகளையும் செய்தம் வாகனத்தை மெதுவாக செலுத்தியுள்ளார். அந்தசமயத்தில் TN 55 BE 9361 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தை பேருந்து நிலையத்தில் பேருந்துகள் உள்ளே செல்லும் நுழைவுவாயிலில் விதிகளுக்கு புறம்பாக இந்த மனுதாரர் வெளியே ஓட்டி வந்துள்ளார். அந்த சமயத்தில் பேருந்து ஓட்டுநர் போதுமான சமிக்ஞைகளை ஏற்படுத்தியபோதும், மனுதாரர் பேருந்து வாகனத்தின் மீது மோதிவிட்டார். அதனால், தாவா விபத்துக்கு அரசு பேருந்து ஓட்டுநர் காரணமல்ல. பேருந்து ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது என்ற காரணத்தினால் மட்டுமே அதுபோதுமான நிரூபணம் ஆகாது. விபத்து சமயத்தில் அஜாக்கிரதையாக வாகனத்தை இயக்கியதாக சொல்லும் சங்கதியை மனுதாரர்தான் நிரூபிக்க வேண்டும். அது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை வழங்கியவரையோ அல்லது தயார் செய்தவரையோ விசாரிக்க வேண்டியது அவசியமாகும். தாவா விபத்துக்கு இரு வாகன ஓட்டிகளின் கவனமின்மை காரணமாக இருப்பதால் இருவாகன ஓட்டுநர்களுக்கும் கூட்டு பொறுப்பு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். விபத்து சமயத்தில் மனுதாரர் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. அவர் பொது இடத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான முறையான ஓட்டுநர் உரிமமும் பெற்றிருக்கவில்லை. அதனால், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியதாகும்.

**4) <u>இந்நிலையில் இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்</u> :**

1) தாவா விபத்தானது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதா?

2) மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? பெறத்தக்கவர் எனில் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்?

**5)** இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 சாட்சி மட்டும் விசாரிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற தரப்பில் நீ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) தாவா விபத்தானது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதா?**

11.07.2023 தேதியில் காலை சுமார் 08.05 மணியளவில் மனுதாரர் TN 55 BE 9361 என்ற பதிவெண் கொண்ட Honda Activa இருசக்கர வாகனத்தில் அவரது பேரன் சரண்ராஜ் என்பவரை பள்ளிக்கூடம் அனுப்புவதற்கு அரிமளத்திற்கு பஸ் ஏற்றிவிடுவதற்காக புதுக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு கொண்டு சென்று பஸ் ஏற்றிவிட்டு, திரும்ப தனது வீட்டிற்கு வருவதற்காக புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் வெளியில் அம்மா மருந்தகம் எதிரில் சத்தியமூர்த்தி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடதுபுறமாக நின்று கொண்டிருக்கும்போது மேற்படி அதே ரோட்டில் எதிர்மனுதாரருக்கு சொந்தமான அரசு பேருந்தை ஓட்டிவந்த ஒரு ஞானராஜ் என்பவர் மேற்படி பேருந்தை அதிகவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து நின்றுகொண்டிருந்த மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில்

மோதிவிட்டதாகவும், அது சம்பந்தமாக பேருந்து ஓட்டுநர் மீது புதுக்கோட்டை நகர காவல் நிலைய குற்ற எண்.298/2023 இ..த.ச.பிரிவுகள் 279,337ன் படி ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், அதனால் தாவா விபத்துக்கு எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்பதாக மனுதாரர் தரப்பில் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**7)** எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து வாதுரைக்கும்போது மனுதாரர் அவர் முதல் முறையாக கொடுத்த புகார் வாக்குமூலத்தில் சம்பவ தேதியில் மனுதாரரின் பேரரைனை அரிமளத்திற்கு பஸ் ஏற்றி விடுவதற்காக இருசக்கர வாகனத்தில் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் கொண்டு சென்று பஸ் ஏற்றிவிட்டு திரும்ப வீட்டிற்கு செல்வதற்காக புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தின் வெளியிலுள்ள அம்மா மருந்தகம் எதிரில் சத்தியமூர்த்தி சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் வலதுபுறத்தில் வந்து இடதுபுறமாக திரும்புவதற்காக நின்றுகொண்டிருந்தபோதுதான் அரசுபேருந்து மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் மீது மோதி அவருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவித்திருந்தபோதிலும் மனுதாரர், போக்குவரத்து விதிகளை மீறி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் உள்ளே செல்லும் நுழைவு வாயிலின் வழியாக மனுதாரர் தனது இருசக்கர வாகனத்தில் வெளியே வந்ததால் தான் பேருந்தை கவனிக்காமல் மனுதாரர் பேருந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதுபோல் வாதுரைக்கப்பட்டுள்ளது.

**8**) எதிர்மனுதாரர் தரப்பு வாதுரையை கவனமாக பரிசீலிக்கும்போது மனுதாரர் பேருந்துநிலையத்தினுள் அவருடைய பேரனை இறக்கிவிட்டுவிட்டு அதே இருசக்கர வாகனத்தில் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் உள்ளே செல்லும் நுழைவுவாயிலின் வழியாக வெளியேறியிருப்பது தெரிய வருகிறது.

அதனால் தான், அவருடைய குறுக்கு விசாரணையின்போது விபத்து நடந்த இடமானது புதிய பேருந்து நிலையத்தினுள் பேருந்துகள் உள்ளே செல்வதற்கான இடத்திற்கு நேராக வடக்கு பக்கம் நடைபெற்றுள்ளதாக மனுதாரர் சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு மனுதாரர் அந்த இடத்தில் இருசக்கர வாகனத்தை நிறுத்தி நின்று கொண்டிருக்க வாய்ப்பில்லை. அதுபோன்ற சமயத்தில் மனுதாரர் வாகனமும் அரசுபேருந்தும் நேருக்கு நேர் மோதுவதற்கே அதிக வாய்ப்புள்ளது. ஆனால், அரசு பேருந்தானது மனுதாரரின் இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதியதாக மனுதாரரின் வழக்கு அமைந்திருந்தபோதிலும் அந்த சங்கதியை நிரூபிக்கும் விதமாக குற்றவழக்கில் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தையோ அல்லது மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையையோ மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துகொள்ளவில்லை. அவ்வாறான சங்கதி மனுதாரரின் இருசக்கர வாகனத்தில் அரசுபேருந்தானது பின்புறமாக மோதியிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. மனுதாரர் அவருடைய பேரனை இறக்கிவிடுவதற்காக இருசக்கர வாகனத்துடன் பேருந்து நிலையத்திற்குள் சென்றதும், பேருந்து நிலையத்திலிருந்து வெளியேறும்போது பேருந்துகள் வெளியேறும் பகுதியில் செல்லாமல் பேருந்துகள் உள்ளே நுழையும் பகுதியில் மனுதாரர் இருசக்கர வாகனத்துடன் வெளியேறியதாலேயே தாவா விபத்து நடைபெற்றுள்ளதாக தெரிகிறது. அதனால், தாவா விபத்துக்கு மனுதாரரும் கூட்டுப்பொறுப்பாவார்.

9) தாவா விபத்தானது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் நடைபெற்றுள்ளதாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும், கையிலுள்ள இந்த மனுவில் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலித்து பார்த்த வகையில் தாவா விபத்துக்கு மனுதாரரின் கவனமின்மையும் காரணம் என்பதால் மனுதாரரும்

பேருந்து ஓட்டுநரும் தாவா விபத்துக்கு கூட்டு பொறுப்பு ஏற்க வேண்டுமென்று வினா எண்.1க்கு தீர்வு காணப்படுகிறது.

**10) மனுதாரர் இழப்பீடு பெறத்தக்கவரா? பெறத்தக்கவரெனில் எவ்வளவு இழப்பீடு பெறத்தக்கவர்?**

தாவா விபத்திற்கு மனுதாரர் மற்றும் அரசுபேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவு காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்துள்ளதால் மேற்படி விபத்தில் காயம்பட்டு பாதிக்கப்பட்ட மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து பாதியளவிற்கு இழப்பீடு பெற உரிமையுள்ளவர் ஆவார்.

**11) மனுதாரர் எந்தெந்த தலைப்புகளின் கீழ் எவ்வளவு தொகையை இழப்பீடாக பெறத்தக்கவர் என்ற விபரம் பின்வருமாறு :–**

(i) <u>வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு</u>

மனுதாரருக்கு தாவா விபத்தில் வலதுபக்க தலையில் காயம்பட்டு மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதாகவும், வலது பக்க கணுக்காலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் வாதுரைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுமையான காயங்கள் என்பதாக சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்டிருந்த காயத்திற்கான வலி மற்றும் வேதனையை பணத்தால் ஈடு செய்ய இயலாத என்ற போதிலும் தாவா விபத்தில் ஏற்பட்டிருந்த காயங்களின் காரணமாக அவருடைய வலி மற்றும் வேதனைக்காக **ரூ.1,00,000/–**த்தை இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

## (ii) ஊனத்திற்கான இழப்பீடு

மனுதாரருக்கு தாவா விபத்தில் வலதுபக்க தலையில் காயம்பட்டு மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதாகவும், வலது பக்க கணுக்காலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் வாதுரைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுமையான காயங்கள் என்பதாக சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களின் காரணமாக அவருக்கான ஊனத்தின் சதவிகிதத்தை 9% என்று மருத்துவக்குழு நிர்ணயித்துள்ளது. தாவா விபத்து 2023ம் வருடம் நடைபெற்றுள்ளதால் மனுதாரருக்கான ஊனம் சம்பந்தப்பட்ட இழப்பீடுக்காக 9000X9=**ரூ.81,000/-**த்தை ஊனத்திற்கான இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

## (iii) வருமான இழப்பீடு

மனுதாரருக்கு தாவா விபத்தில் வலதுபக்க தலையில் காயம்பட்டு மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதாகவும், வலது பக்க கணுக்காலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் வாதுரைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுமையான காயங்கள் என்பதாக சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. மனுதாரர் மத்திய அரசு பணியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். அவர் ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ.31,110/- பெற்று வந்துள்ளார். அந்த சங்கதி எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டு கடுமையாக மறுக்கப்படவில்லை. மனுதாரருக்கு ஏற்பட்டிருந்த காயங்களுக்காக அவர் சுமார் 8 மாதங்களாவது சிகிச்சை பெற்றிருக்க வாய்ப்புள்ளது. அந்தவகையில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய வருமானத்திற்கான இழப்பீடாக அவருடைய ஓய்வூதியத்தை மாத வருமானமாக எடுத்துக்கொண்டு

31,110X8=**ரூ.2,48,880/-** ஆனது மனுதாரருக்கு வருமானத்திற்கான இழப்பீடாக கிடைக்கதக்கது என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**(iv) மருத்துவ இழப்பீடு**

மனுதாரருக்கு தாவா விபத்தில் வலதுபக்க தலையில் காயம்பட்டு மூளையில் இரத்த உறைவு ஏற்பட்டுள்ளதாகவும், வலது பக்க கணுக்காலில் எழும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தரப்பில் வாதுரைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுமையான காயங்கள் என்பதாக சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. மனுதாரர் அவருடைய காயங்களுக்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு மருத்துவ செலவு செய்ததற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்திருக்கவில்லை. இருந்தபோதிலும், மனுதாரருக்கு ஏற்பட்டிருந்த கொடுமையான காயத்தின் காரணமாக அவர் ரூ.10,000/- அளவிற்கு மருத்துவ செலவு மேற்கொண்டிருப்பார் என்பதாக இத்தீர்ப்பாயம் கருதுகிறது. அந்த வகையில், மனுதாரருக்கு மருத்துவ செலவுக்கான இழப்பீடாக **ரூ.10,000/-** கிடைக்கத்தக்கதாகும்.

**(v) உதவியாள் வைத்துக்கொண்ட வகையில் இழப்பீடு**

மனுதாரருக்கு தாவா விபத்தில் வலதுபக்க தலையிலும் வலது பக்க கணுக்காலிலும் கொடுமையான காயங்கள் ஏற்பட்டுள்ளது. அந்த காயங்களுக்காக 75 வயது நிரம்பிய மனுதாரர் மிகுந்த வலி மற்றும் வேதனையினால் உதவியாள் இல்லாமல் அவர் எந்தவொரு செயலையும் மேற்கொண்டிருக்க இயலாது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் கொடுமையான காயங்கள் என்பதாக சான்றாவணங்கள் மூலம் தெரியவருகிறது. அதன்காரணமாக மனுதாரருடைய

சிகிச்சை காலத்தில் அவர் உதவிக்கு ஆள் வைத்துக்கொள்ளாமல் தம்முடைய அன்றாட வேலைகளை செய்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறான சூழ்நிலையில் மனுதாரர் உதவிக்கு ஆள் வைத்துக் கொண்டவகையில் மாதம் ஒன்றுக்கு ரூ.2000த்தை நிர்ணயிக்கலாம் என்றும், அந்தவகையில் மனுதாரர் மேற்படி தலைப்பின் கீழ் 2000X8=**ரூ.16,000/-**த்தை இழப்பீடாக பெறத்தக்கவர் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

### (vi) <u>கூடுதல் ஊட்டச்சத்துக்கான இழப்பீடு</u>

மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 75 வயதான நிலையில், மனுதாரருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் முழுமையாக குணமாக அவருக்கு கூடுதல் ஊட்டச்சத்து தேவைப்படும் வகையிலேயே இருந்து வந்துள்ளது. மனுதாரர் சிகிச்சை பெற்று வந்த காலங்களில் அவருக்கு கூடுதல் ஊட்டச்சத்து தேவைப்பட்ட வகையில் மொத்தம் **ரூ.25,000/-**த்தை கூடுதல் ஊட்டச்சத்துக்கான இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

### (vii) <u>பயண செலவு</u>

தாவா விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்டிருந்த காயங்களினால் அவர் சாதாரணமாக பேருந்து போன்ற வாகனங்களில் பயணம் செய்ய இயலாமல் தனியாக காரில் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு மனுதாரர் அவருடைய காயங்களுக்காக சிகிச்சை பெற்று வந்த காலத்திலும், தொடர் சிகிச்சைக்காகவும், மனுதாரர் பயண செலவு செய்த வகையில் **ரூ.10,000/-**த்தை பயண செலவுக்கான இழப்பீடாக வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது.

**12)** அந்த வகையில் மனுதாரருக்கு கிடைக்க கூடிய இழப்பீடு யாதெனில்,

| | | |
|---|---|---|
| வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | ரூ. | 1,00,000/- |
| ஊனத்திற்கான இழப்பீடு | ரூ. | 81,000/- |
| வருமானத்திற்கான இழப்பீடு | ரூ. | 2,48,880/- |
| மருத்துவ செலவுக்கான இழப்பீடு | ரூ. | 10,000/- |
| உதவியாளர் வைத்து கொண்ட வகையில் இழப்பீடு | ரூ. | 16,000/- |
| கூடுதல் ஊட்டச்சத்துக்கான இழப்பீடு | ரூ. | 25,000/- |
| பயண செலவிற்கான இழப்பீடு | ரூ. | 10,000/- |
| **மொத்தம்** | **ரூ.** | **4,90,880/-** |
| **மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய 50% தொகை இழப்பீடு** | **ரூ.** | **2,45,440/-** |
| கழிக்கவேண்டிய 20% தொகை | ரூ. | 49,088/- |
| மனுதாரர்களுக்கு கிடைக்க வேண்டிய மொத்த தொகை | **ரூ.** | **1,96,352/-** |

**13)** தாவா விபத்துக்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு காரணம் என்பதாகவே இத்தீர்ப்பாயத்தால் வினா எண்.1க்கு விரிவாக தீர்வு காணப்பட்டுள்ளது. அதனால் தாவா விபத்துக்கு மனுதாரரும் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரும் கூட்டுபொறுப்பு ஏற்க வேண்டும். அதன்காரணமாக மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய மொத்த இழப்பீட்டுத்தொகையில் 50% தொகை மட்டுமே இழப்பீடாக கிடைக்கத்தக்கதாகும். அதிலும், மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை. அந்த சமயத்தில் அவர் தலைகவசமும் அணிந்திருக்கவில்லை. மனுதாரருக்கு விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை பொது இடத்தில் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இருந்ததாகவோ

அந்த சமயத்தில் அவர் தலைக்கவசம்அணிந்திருந்ததாகவோ மனுதாரர் தரப்பில் நிரூபணம் எதுவும் செய்திருக்கவில்லை. அதனால், மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய இழப்பீட்டுத் தொகையில் 20% தொகையை கழித்துக்கொள்ளவேண்டுமென்றும் மீதி தொகை எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்று வினா எண்.2 க்கு தீர்வு காணப்படுகிறது.

**14)** இறுதியாக, இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டு தொகையான **ரூ.1,96,352/-** ஐ எதிர்மனுதாரர், மனுதாரருக்கு வழங்கவேண்டுமென்றும், மேற்கண்ட இழப்பீட்டுத்தொகைக்கு மனு கோப்பிற்கு எடுத்த தேதி முதல் தொகையை வைப்பீடு செய்யும் தேதிவரை ஆண்டொன்றிற்கு 6% வட்டி வழங்கவும், செலவுத் தொகையான **ரூ.14,747/-**ஐ மனுதாரருக்கு வழங்கவேண்டுமென்று எதிர்மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட இழப்பீட்டுத் தொகையை எதிர்மனுதாரர் ஒரு மாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு வைப்பீடு செய்ய தவறும்பட்சத்தில் மேற்கண்ட இழப்பீட்டு தொகைக்கு மட்டும் ஆண்டொன்றிற்கு 7.5% வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகையை இந்நீதிமன்றம் பராமரித்து வரும் பாரத ஸ்டேட் வங்கி கணக்கு (SBI Main Branch) எண்.42891099353, IFSC Code: SBIN0000902-ல் செலுத்த வேண்டும் என்றும், தொகை செலுத்தப்பட்ட விபரத்தை இத்தீர்ப்பாயத்தின் cjmcourtpudukkottai@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணமான ரூ.1,335/- தொகையில் ஏற்கனவே செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைக் கட்டணமான ரூ.373/- தவிர்த்து மீதி தொகையான **ரூ.962/-**ஐ மனுதாரர் நீதிமன்றக்

கட்டணமாக செலுத்த வேண்டும். வழக்கறிஞர் கட்டணமாக **ரூ.13,317/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் M/s.Cholamandalam MS General Insurance Co., Ltd., -Vs.- Ayyanar and Others reported in 2020(4) CTC 272 என்ற முன்தீர்ப்பில் எடுத்துரைத்துள்ள கருத்துரையின் அடிப்படையில் தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை.** முழு நீதிமன்றக் கட்டணத்தையும் செலுத்திய பிறகு மோட்டார் வாகன சட்டம் பிரிவு 168(2) மற்றும் விதி 20(6)-ன் கீழ் தரப்பினர்களுக்கு உத்தரவின் நகலை இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

| **செலவுத்தொகை பட்டியல்** | |
|---|---|
| | ரூ. |
| நீதிமன்றக் கட்டணம் | 1,335/- |
| வக்காலத்து | 10/- |
| சம்மன் | 5/- |
| ஆவணங்களின் முத்திரைக் கட்டணம் | 20/- |
| மனுக்களின் முத்திரைக் கட்டணம் | 60/- |
| வழக்கறிஞர் கட்டணம் | 13,317/- |
| மொத்தம் | **14,747/-** |

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

K S PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.03.07 20:08:42 +0530

**தீர்ப்பாய நீதிபதி,**
**தலைமை நீதித்துறை நடுவர்**
**புதுக்கோட்டை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :**

ம.சா.1. திரு.ராஜீ, (மனுதாரர்)

**<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவாணங்கள்</u>:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 11.07.2023 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ.2 | 17.07.2023 | விடுவிப்பு சான்று நகல் |
| ம.சா.ஆ.3 | – | மனுதாரரின் ஆதார் அட்டை நகல் |
| ம.சா.ஆ.4 | – | மருத்துவ பரிந்துரை நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி</u> :**

எ.ம.சா.1.திரு. ஞானராஜ்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவாணங்கள்</u> :**

இல்லை.

**<u>நீதிமன்றத் தரப்பு சாட்சிகள்</u> :**

இல்லை.

**<u>நீதிமன்ற தரப்பு சான்றாவாணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 03.12.2025 | ஊனச்சான்று அசல் |

K S PAULPANDIAN

Digitally signed by K S PAULPANDIAN
Date: 2026.03.07 20:08:53 +0530

**தீர்ப்பாய நீதிபதி,**
**தலைமை நீதித்துறை நடுவர்**
**புதுக்கோட்டை.**